# MADURAI RK IAS ACADEMY

# Current Affairs August - 2024

**MADURAI RK IAS ACADEMY**

NO 128, Second Floor (KFC Building), K K Nagar, Opposite District Court, Madurai-625020.

**9843838779, 9159962788**

| வ.எண் | தலைப்பு | பக்கஎண் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நிர்வாகம் மற்றும் தமிழகம்தொடர்பான செய்திகள் | 3 |
| 2. | தமிழக அரசுத் திட்டங்கள் | 4 |
| 3. | தமிழக அகழாய்வுகள் | 6 |
| 4. | இந்தியா தொடர்பான செய்திகள் | 7 |
| 5. | நியமணங்கள் | 11 |
| 6. | சர்வதேச ஒப்பந்தங்கள் | 13 |
| 7. | சர்வதேச நிகழ்வுகள் | 13 |
| 8. | விளையாட்டு | 14 |
| 9. | முக்கிய ஆளுமைகள் | 16 |
| 10. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | 16 |
| 11. | இலக்குகள் மற்றும் குறியீடுகள் | 18 |
| 12. | விருதுகள் | 18 |
| 13. | இந்திய மாநாடுககள் | 21 |
| 14. | இந்திய ஆட்சியல் பற்றிய செய்திகள் | 21 |
| 15 | பொருளாதாரம் | 22 |
| 16. | நூல்கள் மற்றும் அதன் ஆசிரியர்கள் | 22 |
| 17. | போர் பயிற்சிகள் | 22 |
| 18. | புகழ்பெற்ற நபர்கள் | 23 |
| 19. | முக்கிய தினங்கள் | 23 |

# 1.தமிழ்நாட்டு நிர்வாகம் மற்றும் தமிழகம் தொடர்பான செய்திகள்

**மகப்பேறு விடுப்பு முடிந்து பணிக்குத் திரும்பும் பெண் காவலர்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர்களது சொந்த மாவட்டத்திலேயே பணி மாறுதல் வழங்கப்படும் என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்**

- தமிழக காவல்துறையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு ஓராண்டு மகப்பேறு விடுமுறை அளிக்கப்படுகிறது
- இந்த விடுமுறை முடிந்து பணிக்கு திரும்பும்போது குழந்தைகளை பராமரிப்பதில் பல சிரமங்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர்
- மகப்பேறு விடுமுறை முடிந்து பணிக்கு திரும்பும் பெண் காவலர்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர்களது பணி மூப்புக்கு விளக்க அளித்து, அவர்களுடைய பெற்றோர் அல்லது கணவர் வீட்டினர் வசிக்கும் மாவட்டத்திற்கு பணி மாறுதல் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது

**நியாயவிலை கடைகளில் பொருட்களை பாக்கெட்டுகளில் விநியோகிக்கும் திட்டம்**

- தொடக்கம் - 1ஆகஸ்ட் 2024
- இந்த திட்டம் முதல் கட்டமாக சேலம் மாவட்டம், சீரங்கப் பாளையம் நியாய விலை கடையில் தொடங்கப்பட்டது.
- அனைவருக்கும் சரிவிகித உணவு ஊட்டச்சத்தை உறுதி செய்யும் பொருட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி சர்க்கரை கோதுமை துவரம் பருப்பு பாமாயில் ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு நியாய விலை கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன
- இவ்வாறு விநியோகம் செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களை சிலர் முறைகேடாக கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதாக தொடர்ந்து புகார்கள் எழுந்தன இதை தடுக்கும் விதமாக உணவுப் பொருட்களை பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்ய அரசுத் திட்டமிட்டு அதற்கான பணியை தொடங்கியுள்ளது

**தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீடு**

- நாணயத்தை வெளியிட்டவர் ராஜ்நாத் சிங் (மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்)
- கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டின் ஐந்து முறை முதல்வராக இருந்தார்
- கருணாநிதி பெயரில் சென்னையில் பன்னோக்கு மருத்துவமனை மதுரையில் நூற்றாண்டு நூலகம் கிளாம்பாக்கத்தில் பேருந்து முனையம் போன்றவை அவரது நூற்றாண்டில் உருவாக்கப்பட்டுள்ளன
- நாணயத்தின் சிறப்பம்சங்கள்
  1. வட்ட வடிவில் 44 மில்லி மீட்டர் சுற்றளவு 35 கிராம் எடையும் கொண்டதாகும்
  2. 200 எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நாணயங்கள் நான்கு வகையான உலோகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன
  3. வெள்ளி 50 சதவீதம் தாமிரம் 40% நிக்கல் மற்றும் துத்தநாகம் தலா 5% சேர்த்து உருவாக்கப்பட்டது
  4. நாணயத்தின் முகப்பு பக்கத்தில் அசோகச் சக்கரம் சிங்கம் இந்தியா ஆகிய வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன
  5. முன்பக்கத்தில் கலைஞர் எம் கருணாநிதி பிறந்த நூற்றாண்டு என ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது

**"சிவகங்கை பயணிகள் கப்பல்" சேவை மீண்டும் தொடக்கம்**

- நாகை இலங்கை இடையே சிவகங்கை என்ற கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் தொடங்கப்பட்டது
- கடந்த அக்டோபர் 14ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த கப்பல் ஆனது சில நாட்களில் சேவை நிறுத்தப்பட்டது
- மீண்டும் இந்த சேவையானது தற்போது தொடங்கப்பட்டுள்ளது

**வந்தே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்**

- சென்னை - காட்பாடி இடையிலான சோதனை ஓட்டம் நடைபெறுவதாக இருந்தது ஆனால் சென்னையிலிருந்து வாலாஜா ரோடு ரயில் நிலையத்தோடு சென்னை திரும்பியது
- இந்த ரயில் பெட்டிகள் சென்னையில் உள்ள ஐ சி எ பில் தயாரிக்கப்பட்டன

**கூட்டுறவு செயலி (kootiravu mobile application)**

- மருந்தகம் உட்பட கூட்டுறவு துறை சார்ந்த திட்டங்களை அறிய பிரத்தேக செயலி தொடங்கப்பட்டுள்ளது
- கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் சேவைகளை பொதுமக்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் கூட்டுறவு என்ற செயலியை தமிழக அரசு அறிமுகப்படுத்தியது
- இந்த செயலியை தொடங்கி வைத்தவர் - கே.ஆர். பெரிய கருப்பன்

**1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் பிரிவு 77-A**

- மாநிலத்தில் உள்ள எந்தவொரு அசையாச் சொத்து தொடர்பான ஆவணங்களும் மோசடி மூலம் அல்லது போலி வருவாய் பதிவுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் பதிவு செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால், அவற்றை ரத்து செய்ய மாவட்ட பதிவாளர்களுக்கு அதிகப்படியான நீதித்துறை அதிகாரத்தை வழங்கியதன் அடிப்படையில், 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் பிரிவு 77-A அரசியலமைப்பிற்கு முரணானது என்று சென்னை உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை அறிவித்தது.
- 2022 ஆம் ஆண்டு மாநிலத் திருத்தத்தின் மூலம் மத்திய சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 77-A, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சிவில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுவதற்குப் பதிலாக மாவட்ட பதிவாளரிடமிருந்து விரைவான தீர்வைப் பெறக்கூடிய சில வழக்குகளில் மட்டுமே அப்பாவி நில உரிமையாளர்களுக்கு உதவ முடியும் என்று நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர் மற்றும் என். செந்தில்குமார் ஆகியோர் தெரிவித்தனர்.
- சட்டத்தின் பிரிவு 22-A மற்றும் 22-B ஆகியவை பதிவுத் துறை அதிகாரிகளுக்கு சில ஆவணங்களைப் பதிவு செய்ய மறுக்க அதிகாரம் அளிக்கின்றன என்றும், பிரிவு 77-A அந்த இரண்டு விதிகளையும் மீறி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது என்றும் சுட்டிக்காட்டியது.

**திருப்பூர் மாவட்டம் கொடுவாய் கல்வெட்டு**

- திருப்பூர் மாவட்டம் கொடுவாய் அருகே உள்ள கோவில்பாளையத்தில் உள்ள 1,00 ஆண்டுகள் பழமையான தளிகீஸ்வரர் கோவிலில் இருந்து ஒரு வட்டெழுத்து (பண்டைய தமிழ் எழுத்து) மற்றும் எட்டு தமிழ் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
- கல்வெட்டின் படி, இந்தக் கோயில் கி.பி 9 ஆம் நூற்றாண்டில் கொங்குப் பகுதியின் நடுப் பகுதியை ஆண்ட இடைக்கால சேர ஆட்சியாளர் கொக்கண்டன் வீரநாராயணனால் கட்டப்பட்டது.
- 'வட்டெழுத்து' பதிக்கப்பட்ட கல்வெட்டு ஆனது, கி.பி. (CE) 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரையில் நடைமுறையில் இருந்த தமிழ் மொழியினை எழுதச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவமாகும்.

- எட்டு தமிழ் கல்வெட்டுகளில் ஒன்று கொங்கு சோழ மன்னன் வீர இராஜேந்திரன் (1207-1256) அவர்கள் எழுதியது.
- மீதமுள்ளவை அவரது பேரன் விக்ரம சோழன் அவர்களால் (1273-1305 CE) எழுத்தப் பட்டது.
- இக்கிராமம் ஆனது தொன்மை வாய்ந்த கொங்குநாடு பகுதியின் 'பொங்கலூர்காநாடு' என்ற பகுதியில் உள்ளதாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

## 2. தமிழக அரசு திட்டங்கள்

**தமிழ் புதல்வன் திட்டம்**

- தொடக்கம் - 8 ஆகஸ்ட் 2024
- தொடங்கப்பட்ட இடம் கோவை
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் தமிழ் புதல்வன் திட்டம் தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்
- தமிழகத்தில் ஆறு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் கடந்த ஆண்டு 2022 செப்டம்பர் 5ஆம் தேதி சென்னையில் தொடங்கப்பட்டது
- தமிழ் புதல்வன் திட்டமானது அரசு பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை அதிகரிக்க தமிழ் புதல்வன் திட்டம் அறிமுகம் செய்யப்படுகிறது
- இத்திட்டத்திற்காக தமிழக அரசு 360 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

**14417** என்பது தமிழக கல்வித் துறையின் உதவி எண் ஆகும். இது 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளக்கூடியது.

**14417 உதவி எண்ணின் பயன்கள்:**

- தமிழ்ப் புதல்வன் திட்டம் தொடர்பான கேள்விகளுக்கு விடை பெறலாம்.
- மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் பெறலாம்.
- தமிழ்நாடு பல்கலைக்கழக நிர்வாக தகவல் முறை (UMIS) தொடர்பான கேள்விகளுக்கு விடை பெறலாம்.

**முதல்வர் மருந்தகம்**

- மத்திய அரசின் மக்கள் மருந்தகம் போன்று குறைந்த விலையில் மருந்துகள் வழங்க முதல்வர் மருந்தகம் எனும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் 2024 சுதந்திர தின விழாவில் அறிவித்தார்.
- இது இந்த மாநிலத்தில் மானிய விலையில் பொதுப் பெயர் கொண்ட மருந்துகளை குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- 2025 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் இருந்து தமிழகத்தில் இது போன்று மொத்தம் 1,000 மருந்தகங்கள் இயக்கப்படும்.

**முதல்வர் காக்கும் கரங்கள்**

- முன்னாள் ராணுவ வீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முதல்வரின் காக்கும் கரங்கள் எனும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

- முன்னாள் படை வீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி வரை வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழி செய்யப்படும்.
- இந்தத் திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 சதவீத மூலதன மானியமும் 3% வட்டி மானியமும் அளிக்கப்படும்.

**2024 சுதந்திர தின விழாவில் அறிவிப்பு**

- விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ஆனது 20,000 ரூபாயிலிருந்து 21,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
- தியாகிகளின் குடும்ப ஓய்வூதியமும் 11,000 ரூபாயிலிருந்து 11,500 ரூபாயாக உயர்த்தப் படும்.
- கட்டபொம்மன், வ.உ.சி மற்றும் மருது சகோதரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ஆனது 10,500 ஆக உயர்த்தப்படும்.

**அத்திக்கடவு அவிநாசி திட்டம்**

- தொடக்கம் 17 ஆகஸ்ட் 2024
- தொடங்கி வைத்தவர் முக ஸ்டாலின்
- திட்டத்தின் சிறப்பம்சம் - பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ் புறத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 1.50 tmc உபரிநீர் வினாடிக்கு 250 கன அடி வீதம் 70 நாட்களுக்கு ஆறு நீரேற்று நிலையங்கள் வழியாக 165 கிலோமீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டு உபரி நீர் வீணாகாமல் தடுக்கப்படுகிறது
- பயன்பெறும் மாவட்டங்கள் ஈரோடு திருப்பூர் கோயம்புத்தூர்
- தமிழகத்தில் விவசாயத்திற்கான முதல் நீரேற்று திட்டம் அத்திக்கடவு அவிநாசி திட்டம் ஆகும்

**அத்திக்கடவு அவிநாசி திட்டத்தின் வரலாறு**

- 1957 காலகட்டத்தில் அத்திக்கடவு அவினாசி கால்வாய் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது
- 1967இல் அப்போதைய அவினாசி சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த மாரப்ப கவுண்டர் அந்த திட்டத்தை கொண்டு வர அப்போதைய முதல்வர் காமராஜரிடம் வலியுறுத்தினார்
- 1972ல் இந்த திட்டத்தை செயல்படுத்த கொள்கை முடிவு எடுக்கப்பட்டது
- 1996 இல் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் இந்த திட்டம் தொடர்பான விரிவாக ஆய்வு மேற்கொள்ள அப்போதைய முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டார்
- காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் மோகன கிருஷ்ணன் ஆய்வறிக்கையை அப்போதிய அரசிடம் சமர்ப்பித்தார்
- 2014 இல் முதல்வராக இருந்த ஜெயலலிதா மத்திய அரசு நிதி ஒதுக்கினாலும் ஒதுக்காவிட்டாலும் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார்
- 2018 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி இந்த திட்டத்தை செயல்படுத்த 1652 கோடி நிதி ஒதுக்கினார்
- 2019 பிப்ரவரி 28 இல் திருப்பூர் மாவட்டம் அவினாசி புதுப்பாளையத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது

**வேர்களைத் தேடி திட்டம்**

- தொடக்கம் 27 டிசம்பர் 2023
- அமைச்சகம் புலம்பெயர் தமிழர்கள் நலத்துறை
- தொடங்கப்பட்ட இடம் சிங்கப்பூர்
- புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்களை தமிழ்நாட்டின் கலாச்சார வேர்களுடன் மீண்டும் இணைக்கவும் தமிழ்நாட்டிற்கு உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்த அவர்களுக்கும் இடையிலான கலாச்சார உறவுகளையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்
- பயனாளிகள் வெளிநாட்டுகளில் வாழும் 18 முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்கள்
- தகுதிகள் - வெளிநாடுகளில் வாழும் தமிழ் வம்சாவழியினர் மற்றும் 18 வயது முதல் 30 வயது வரை உள்ள தமிழர்கள்

## 3. தமிழக அகழ்வாய்வுகள்

**17 ஆம் நூற்றாண்டை சேர்ந்த இரண்டு சிற்பங்களுடன் கூடிய போர் வீரர்களின் நடுகல்**

- திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகே உள்ள பொம்பனப்பட்டியில் கிடைத்துள்ளது
- போரில் வீர மரணம் அடைந்தவர்களின் நினைவாக நடப்படும் கற்களே நடுகல் ஆகும்
- நடுக்கல் நடப்படுவதற்கான வழிமுறைகள் குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுகிறது

**வெம்பங்கோட்டை அகழாய்வு**

- வெம்பங்கோட்டை - விருதுநகர் மாவட்டம்
- சுடுமண் முத்திரை விளக்கு கல்பந்து கல்லாலான சில்வட்டு ஆகியவை கண்டறியப்பட்டன
- இங்கு கண்ணாடி மணிகள் கல்மணிகள் சிகை அலங்காரத்துடன் பெண்ணின் தலைப்பகுதி நாயக்கர் கால செம்பு காசு அணிகலன்கள் சங்கு வளையல்கள் உள்ளிட்ட 450 க்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டறியப்பட்டன
- முன்னோர்கள் விலங்குகளை விரட்டுவதற்காக கல்பந்தை பயன்படுத்தியதும் முத்திரை மூலம் வணிகம் செய்து வந்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளது

**13ம் நூற்றாண்டை சேர்ந்த மாணவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன**

- ராமநாதபுரம் மாவட்டத்தில் கண்டறியப்பட்டது
- இந்த கல்வெட்டில் உள்ள இரண்டு வரிகள் ஒரு கல்வெட்டில் ஸ்ரீ கோமாறபன் மறான திரிபுவன சக்கரவர்த்தி என முதலாம் மாணவர்மன் சுந்தரபாண்டியனை குறிப்பிட்டுள்ளது
- மற்றொரு நான்கு வரிகள் கொண்ட கல்வெட்டில் இக்கோவிலுக்கு தேவதானமாக வழங்கப்பட்ட நிலத்தில் ஐப்பசி குருவை விளையும் களத்துக்கு ஒன்று பாதியும், (சந்தி) விக்கிரகப்பேறு ஆகிய வரிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன

**திருப்பத்தூர் அருகே 196 ஆண்டுகளுக்கு முந்தைய செக்கு கல்வெட்டு கண்டெடுப்பு**

**வாழப்பட்டு தென்பெண்ணை ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்**

- இங்கு வட்ட செல்லுதல் சுடுமண் பொம்மை செப்பு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன
- இது கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது

**அறச்செயலை எடுத்துரைக்கும் மூன்று கல்வெட்டுகள் கண்டெடுப்பு**

- திருவண்ணாமலையை அடுத்த தச்சம்பட்டில் மூன்று கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

**கோவை அருகே புதிய கற்கால சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன**

- கோவை அருகே மோளப்பாளையத்தில் உள்ள அகழாய்வுத் தளத்தில் கிடைக்கப்பட்ட பொருட்கள்
  1. கற்கோடாரிகள்
  2. ஒரு மனித ஈம சின்னம் பானையோடுகள் வளர்ப்பு காட்டு விலங்குகளின் எலும்புகள் மான் கொம்புகள் கல் உருண்டைகள் அறவை கற்கள் கடற் கிளிஞ்சல்கலால் செய்யப்பட்ட மணிகள்
  3. பதக்கங்கள் சுடுமண் பொருட்கள் மெருகேற்ற பட்ட கரும்பு சிவப்பு பானை வகைகள் குவாட்ஸ் கற்களால் செய்யப்பட்ட பிளேடுகள் பிறை சந்திர வடிவம் நுண்கருவிகள் கறிந்த சுடுமண் கட்டிகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன

**திண்டுக்கல்லில் நான்காயிரம் ஆண்டுகள் பழமையான பெருங்கற்கால நினைவுச் சின்னமும் கல்லாங்குழிகளும் கண்டறியப்பட்டன.**

**கிபி 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் முத்திரைத்தாள் ஆவணம் திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.**

## 4. இந்தியா தொடர்பான செய்திகள்

**இந்திய கடலோர காவல் படையின் புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம்**

- மீனவர்களை மீட்பது உட்பட கடலோர காவல் படையின் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் சென்னையில் திறக்கப்பட்டுள்ளது
- திறந்து வைத்தவர் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜநாத் சிங்

வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி என்ற இலக்கை அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது

**அண்ணா உணவகம்**

- ஆந்திர பிரதேசம் மாநிலத்தில் தொடங்கப்பட்டது
- ஆந்திர பிரதேசத்தில் ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் உணவளிக்கும் திட்டத்தை அந்த மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு தொடங்கி வைத்தார்

**ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை (UPS) இந்தியாவிலேயே முதல் மாநிலமாக மகாராஷ்டிரா மாநிலம் ஏற்பதாக அறிவித்துள்ளது**

- கடந்த 2004 ஆம் ஆண்டு மற்றும் அதற்குப் பிறகு பணியில் சேர்ந்த அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்திற்கு மத்திய அரசு கடந்த 24 ஆகஸ்ட் 2024 ஒப்புதல் அளித்தது
- பண வீக்கத்தை சரி செய்தல் மற்றும் பிற சலுகைகளுடன் கடைசி 12 மாத சராசரி சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது
- 10 ஆண்டுகளுக்கு குறையாமல் மத்திய அரசில் பணிபுரிந்தவருக்கு இத்திட்ட மூலம் குறைந்தபட்சம் 10,000 ஓய்வூதியமாக கிடைக்கும்

**ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம்**

1. ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (யுபிஎஸ்) என்பது இந்தியாவில் உள்ள அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டமாகும், இது உட்பட பல நன்மைகளை வழங்குகிறது:
2. ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் 2025 ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது
3. உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம்
4. குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் பணிபுரியும் பணியாளர்கள், ஓய்வு பெறுவதற்கு முந்தைய 12 மாதங்களில் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50% ஓய்வூதியத்தைப் பெறுகிறார்கள்.

**திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- இந்த திட்டத்தில் சேர குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிக்காலம் இருக்க வேண்டும்
- குறைந்தபட்ச பணிக்கால வரம்பான பத்து ஆண்டுகளில் ஓய்வு பெறுபவர்களுக்கு குறைந்தபட்சம் 10,000 மாத ஓய்வூதியம் வழங்கப்படும்
- 25 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறுபவர் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக அளிக்கப்படும்
- பணி ஓய்வுக்குப் பிறகு அரசு ஊழியர் உயிரிழக்கும் நிலையில் குடும்ப உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்
- ஓய்வு பெறும் போது கூடுதல் பணிக்கொடையுடன் பணப்பலன் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

**ஒரிசா மாநிலத்தில் தங்க படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன**

- ஒடிசாவின் பல்வேறு மாவட்டங்களில் தங்க படிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக ஒடிசாவின் உருக்கு மற்றும் சுரங்க துறை அமைச்சர் பிபூதி பூசன் தெரிவிப்பு

**உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது அணு உலை உற்பத்தியை தொடங்கியது**

- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது 700 மெகாவாட் அணு உலை குஜராத் மாநிலத்தில் உள்ள கர்பார் அணுமின் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் அணு உலை - அப்சரா
    1. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் அணு உலை அப்சரா ஆகும்.
    2. அப்சரா உலை ஆகஸ்ட் 1956 இல் கட்டப்பட்டது.
    3. அப்சரா உலைக்கு அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு பெயரிட்டார்.
    4. இது மிகவும் பல்துறை நீச்சல் குளம் வகை உலை.
    5. இது அணுக்கரு இயற்பியலில் அடிப்படை ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது.
    6. அப்சரா ஆசியாவின் பழமையான ஆராய்ச்சி உலை ஆகும்.
    7. 2009 இல் அப்சரா மறுசீரமைப்புக்காக மூடப்பட்டது.
    8. அப்சரா-மேம்படுத்தப்பட்ட(அப்சரா-யு) என்பது அபசரா உலையின் புதிய பதிப்பு.

**பிரதமரின் JI-VAN திட்டம்**

1. மத் திய அமைச்ச ரவை பிரதம ரின் JI-VAN (Jaiv Indhan- Vatavaran Anukool fasal awashesh Nivaran) திட்ட த்தை **2028-29 வரை ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க ஒப்புதல் அளித்துள்ள து**.
2. இது நாட்டின் மேம்பட்ட உயிரி எரிப ொருள் துறையை மேம்படுத்துவதை ந ோ க்கமா கக் முக்கிய முயற்சியா கும்.
3. இது 2070க்குள் இந்தியாவின் பசுமை இல்ல வாயு உமிழ்வு இல்லாத இலக்குகளுடன் ஒத்துள்ளது
4. மற்றும் மேக் இன் இந்தியா முயற்சிக்கு ஆதரவளிக்கிறது.

5. இது உபரி உயிரித்திரள் மற்றும் விவசாய கழிவுகளிலிருந்து 2வது தலை முறை (2G) எத்தனா ல் உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.

6. இது முதலில் மார்ச் 2019இல் தொடங்கப்பட்ட து.

**உலகின் மிகப்பெரிய பசுமை ரயில்வே நெட்வொர்காக இந்திய ரயில்வே உருவெடுத்துள்ளது**

- இந்திய ரயில்வே பாதைகள் 95% மின்மயமாக்கப்பட்டுள்ளது

**பாரத் பயோடெக் இன் காலரா தடுப்பு மருந்து அறிமுகம்**

- காலரா நோயை தடுக்க "ஹில்கால்" என்ற வாய்வழி செலுத்தும் தடுப்பு மருந்தை பாரத் பயோடெக் நிறுவனம் அறிமுகப்படுத்தியது
- இந்த நிறுவனம் ஹைதராபாத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது
- கரோனா காலத்தில் கோவாக்சிங் என்ற தடுப்பூசியை உருவாக்கியது பாரத் பயோடெக் நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது

**ஜன் தன் திட்டம்**

- தொடக்கம் 28 ஆகஸ்ட் 2014
- பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) வெற்றிகரமாக 10 ஆண்டுகளை நிறைவேற்றியுள்ளது
- இது ஆகஸ்ட் 28, 2014 அன்று தொடங்கப்பட்டது மற்றும் உலகளவில் மிகப்பெரிய நிதி உள்ளடக்கிய முயற்சிகளில் ஒன்றாக உள்ளது , இது பாதிக்கப்படக்கூடிய மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு மலிவு நிதி சேவைகளை வழங்க நிதி அமைச்சகத்தின் தலைமையில் உள்ளது .
- **பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா என்றால் என்ன?**
- PMJDY ஆனது , ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு அடிப்படை வங்கிக் கணக்கு, நிதியியல் கல்வியறிவு மற்றும் கடன், காப்பீடு மற்றும் ஓய்வூதிய வசதிகளுக்கான அணுகலுடன் வங்கி வசதிகளுக்கான உலகளாவிய அணுகலுக்கான தளத்தை உருவாக்குகிறது .
- **PMJDY இன் அம்சங்கள்**:
- கிளைகள் மற்றும் வங்கி நிருபர்கள் (BCs) மூலம் வங்கிச் சேவைகளை விரிவுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களை உள்ளடக்கியது மற்றும் கணக்கைத் தொடங்குபவர்களுக்கு உள்நாட்டு டெபிட் கார்டு (ரூபே கார்டு) கிடைக்கும்.
- PMJDY கணக்குகளில் குறைந்தபட்ச இருப்புத் தொகையை பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை.
- PMJDY கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் RuPay கார்டில் ரூ.1 லட்சம் விபத்துக் காப்பீட்டுத் தொகை (28.8.2018க்குப் பிறகு திறக்கப்படும் புதிய PMJDY கணக்குகளுக்கு ரூ. 2 லட்சமாக உயர்த்தப்பட்டது) கிடைக்கும்.
- இது ரூ. ஓவர் டிராஃப்ட் வசதியை வழங்குகிறது. தகுதியுள்ள ஒவ்வொரு பெரியவருக்கும் 10,000.
- PMJDY கணக்குகள் நேரடி பலன் பரிமாற்றம் (DBT) , பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) , பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) மற்றும் அடல் பென்ஷன் யோஜனா (APY) ஆகியவற்றுக்கு தகுதியானவை

## Pm sri schools

இந்தத் திட்டம் செப்டம்பர் 7, 2022 அன்று தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மார்ச் 2024 இல் செயல்படுத்த தமிழ்நாடு ஒப்புக்கொண்டது

பிரதான் மந்திரி ஸ்கூல்ஸ் ஃபார் ரைசிங் இந்தியா (PM SHRI) திட்டம், தற்போதுள்ள பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தால் மத்திய-ஆதரவு அளிக்கப்பட்ட திட்டமாகும்:

**இலக்கு** : தேசியக் கல்விக் கொள்கை 2020ஐ வெளிப்படுத்தும் மற்றும் பிற பள்ளிகளுக்கு முன்மாதிரியாக செயல்படும் பள்ளிகளை உருவாக்குதல்

**பள்ளிகள்** : இத்திட்டம் மத்திய அரசு, மாநில அரசுகள், யூனியன் பிரதேச அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள், கேவிஎஸ் மற்றும் என்விஎஸ் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் 14,500க்கும் மேற்பட்ட பள்ளிகளை மேம்படுத்தும்.

**விஞ்ஞான தாரா திட்டம்**

- மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையின் விஞ்ஞான தாரா என்ற ஒருங்கிணைந்த மத்திய துறை திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது
- கிராமப்புற வளர்ச்சிக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மனிதர்களின் திறன்களை வளர்ப்பது ஆராய்ச்சி மேம்பாடு புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நடைமுறை ஆகியவற்றை ஊக்குவிப்பதை திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது
- உயிர் தொழில்நுட்பத் துறையில் பொருளாதாரம் சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கான உயிரை தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான பயோ இ 3 திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது

**வத்வான் துறைமுக திட்டம்**

- மகாராஷ்டிரா மாநிலம் பால்கார் மாவட்டத்தில் செயல்படுத்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்
- வத்வான் துறைமுகம் உலக தரம் வாய்ந்த கடல் வழி நுழைவு வாயிலை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

**22 ஆவது சட்ட ஆணையம்**

- பதவிக்காலம் - 3 ஆண்டுகள் (2020 பிப்ரவரி முதல் 2024 ஆகஸ்ட் 31 வரை)
- 22 ஆவது சட்ட ஆணையத்தின் தலைவர்- ரிது ராஜ் அவஸ்தி

**தேர்தல் ஆணையத்தின் செயலிகள்**

- **சி- விஜில்**
  - ✓ தேர்தலின் போது வன்முறைகள் நிகழ்வதை தடுக்க இந்த செயலை பயன்படுத்தலாம்
  - ✓ இந்த செயலை மூலம் வன்முறை நடைபெறும் இடம் நேரம் உள்ளிட்ட விபரங்களுடன் புகைப்படம் மற்றும் வீடியோக்களை பதிவேற்றம் செய்து புகார் அளிக்க முடியும்
  - ✓ இதன் மூலம் பறக்கும் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும்
- **சுவிதா**
  - ✓ தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள் மற்றும் வாக்குகளை சேகரிக்க ஊர்வலங்களை நடத்துவதற்கும் ஹெலிகாப்டர்கள் உள்ளிட்ட வாகனங்களை பயன்படுத்துவதற்கும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவதற்கும் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற ஒற்றை சாலர விண்ணப்பம் முறைக்கான வசதிக்காக இந்த செயலில் அறிமுகப்படுத்தப்பட்டது

- **வாக்காளர் உதவி செயலி**
  - ✓ வாக்காளர் உதவி செயலி (voter helpline app) இந்த செயலை மூலம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் உள்ளதா என்பதை அறியவும் வாக்காளர் பதிவுக்கான இணைய வழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும் இது பயன்படுகிறது
  - ✓ 1950 என்ற உதவி தேர்தல் பற்றி தொடர்பு கொள்வதற்கான கட்டணம் இல்லா அழைப்பாகும்

**பிரதமரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் மூன்றாம் பாலினத்தவர் சேர்ப்பு**

- ஆயுஷ்மான் பாரத் பிரதமரின் மருத்துவ காப்பீட்டு திட்டம்
  - ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா ( PM-JAY ; லிட். ' பிரதமரின் மக்கள் சுகாதாரத் திட்டம் ' , ஆயுஷ்மான் பாரத் PM-JAY லிட். ' லைவ் லாங் இந்தியா பிரதம மந்திரி மக்கள் நலத் திட்டம் ' ), இது மோடிகேர் என்றும் அழைக்கப்படுகிறது ,
  - தொடக்கம் 23 செப்டம்பர் 2018
  - மத்திய குடும்ப நல அமைச்சகம்

**ஆயுதப் படையினருக்கு ஜிபிஎஸ் வசதியுடன் பிரத்தியேக காலனி**

- இந்தூர் ஐஐடி உருவாக்கியது
- ஆயுதப் படை வீரர்களின் பாதுகாப்பு மற்றும் செயல் திறனை அதிகரிக்கும் கண்டுபிடிப்புக்காக மின்சாரம் தயாரிக்கும் மற்றும் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்துடன் பிரத்தேக காலணிகளை இந்துர் ஐஐடி வடிவமைத்துள்ளது
- இந்தக் காலணிகளை அணிந்திருப்பவரின் இருப்பிடத்தை நிகழ் நேரத்தில் கண்டறிய முடியும் என்று கண்டுபிடிப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்
- DRDO விற்க்கு இந்த காலணிகளை இந்தூர் ஐஐடி வழங்கியுள்ளது

**இந்தியாவின் முதல் விண்வெளி தினம்**

- ஆகஸ்ட் 23
- சந்திராயன் 3 திட்டம் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கிய நாளை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தேசிய விண்வெளி தினமாக அறிவித்தார் (ஆகஸ்ட் 23)
- சந்திராயன் 3 விண்கலம் நிலவில் தரை இறங்கிய இடத்திற்கு சிவசக்தி என்று பிரதமர் பெயர் வைத்தார்
- சர்வதேச வானியல் ஒன்றியம் சந்திராயன் ஸ்ரீ தரையிறங்கிய இடத்தை ஸ்டேஷன் சிவசக்தி என்று அங்கீகரித்துள்ளது
- சந்திராயன் 3 திட்ட இயக்குனர் - வீர முத்துவேல்

**புதிய மயில்கள் சரணாலயங்கள் 2024**

1. கர்நாடகாவில் உள்ள ஆதிசுஞ்சனகிரி மற்றும் கேரளாவில் சூலன்னூர் ஆகிய இடங்களை மயில்கள் சரணாலயமாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
2. இந்தச் சரணாலயங்கள் ஆனது மயில்கள் மனித இடையூறு இல்லாமல் வாழ்வும் எண்ணிக்கையில் செழித்து வளரவும் ஒரு பாதுகாப்பான இடத்தை வழங்குகின்றன.
3. மயில் வளங்காப்பு என்பது இந்திய நீல மயில் மற்றும் பச்சை மயில் ஆகிய இரண்டையும் பாதுகாப்பதை உள்ளடக்கியது.
4. IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் படி பச்சை மயில் அச்சுறுத்தல் நிலை இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**நீலக்குறிஞ்சி அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்கள்**

1. நீலக்குறிஞ்சி (ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானா) மலரானது, IUCN அமைப்பின் (சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம்) அச்சுறுதல் நிலையில் உள்ள உயிரினங்கள் அடங்கிய அதிகாரப்பூர்வ செந்நிறப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
2. ஊதா நிற மலர்களைக் கொண்ட இந்தப் புதர்ச் செடியினம் ஆனது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.
3. உலகளாவிய செந்நிறப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்காக, தென்மேற்கு இந்தியாவின் மலை சார் புல்வெளிகளில் காணப்படும் இந்த முதன்மை இனம் மதிப்பீடு செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும்.
4. இவற்றினுடைய சுமார் 40% வாழ்விடங்கள் அழிந்து விட்டன என்ற நிலையில் மீதமுள்ள வாழிடங்கள் ஆனது யூகலிப்டஸ் (தைல மரம்) மற்றும் கரு வேலம் போன்ற அயல்நாட்டு இனங்களின் ஆக்கிரமிப்பின் காரணமாக நெருக்கடியான நிலையில் உள்ளன.

**புதிய இராம்சர் தளங்கள் இந்தியா (3 New wetlands added to the Ramsar Sites):**

1. திருப்பூரில் உள்ள நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் மற்றும் விழுப்புரத்தில் உள்ள கழுவேலி பறவைகள் சரணாலயம் ஆகியவை சமீபத்தில் சர்வதேச அங்கீகாரத்தினை பெற்றுள்ளன.
2. இந்தப் புதிய சேர்க்கைகளின் மூலம், தமிழகத்தில் உள்ள இராம்சர் தளங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது இந்திய மாநிலங்களிலேயே அதிகபட்ச எண்ணிக்கையாகும்.
3. மத்தியப் பிரதேசத்தில் உள்ள தவா நீர்த்தேக்கம் ஆனது தற்போது இராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
4. இது இந்தியாவில் உள்ள இராம்சர் தளங்களின் (மொத்த இராம்சர் தளங்களின் பரப்பு 13,58,068 ஹெக்டேர் பரப்பளவு) எண்ணிக்கையை 85 ஆக உயர்த்தியுள்ளது.
5. தற்போது, தமிழ்நாடு அதிகபட்ச இராம்சர் தளங்களை (18 தளங்கள்) கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (10 தளங்கள்) இடம் பெற்றுள்ளது.
6. ஐக்கியப் பேரரசு(UK) (175) மற்றும் மெக்சிகோ (142) ஆகியவை மிகவும் அதிகபட்ச இராம்சர் தளங்களைக் கொண்டுள்ளன.

**அசாமின் மொய்தாம்**

1. இந்தியாவின் 43வது உலகப் பாரம்பரிய தளமாக அசாமின் மொய்தாம் பகுதி சேர்க்கப் பட்டுள்ளது.
2. இவை கி.பி 1228 முதல் 1826 ஆம் ஆண்டு வரை அசாம் மற்றும் வடகிழக்கின் பெரும் பகுதியை ஆண்ட அஹோம் வம்சத்தின் அரச கல்லறைகள் ஆகும்.
3. மொய்தாம் என்பது அஹோம் அரசக் குடும்பம் மற்றும் பிரபுத்துவத்தின் கல்லறையின் மேல் எழுப்பப்பட்ட ஒரு மண் மேடு ஆகும்.
4. அஹோம் மன்னர்கள் அவர்களின் 600 ஆண்டுகால வரலாற்றில் பலமுறை தங்களது தலைநகரங்களை மாற்றியுள்ளனர்.
5. சரைடியோ நகரானது மன்னர் சுகபாவால் கி.பி 1253 ஆம் ஆண்டில் அவர்களின் முதல் தலைநகரமாக நிறுவப்பட்டது.
6. 1856 ஆம் ஆண்டில் சுகபா சரைடியோவில் அடக்கம் செய்யப்பட்ட பிறகு, அதைத் தொடர்ந்து வந்த அரச குடும்பத்தாரும் தங்களை அடக்கம் செய்வதற்கான இடமாகத் தேர்ந்தெடுத்தனர்.
7. இந்தப் பகுதியில் 150க்கும் மேற்பட்ட மொய்தாம்கள் இருந்தாலும் 30 மட்டுமே இந்தியத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப் படுகின்றன.

8. மொய்தாம்கள் தற்போது இந்தப் பட்டியலில் சேர்க்கப் பட்டதைத் தொடர்ந்து அதிக எண்ணிக்கையிலான உலகப் பாரம்பரியச் சொத்துக்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 6வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

## 5. நியமனங்கள்

**தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக N. முருகானந்தம் பொறுப்பேற்றார்**

- இவர் தமிழ்நாட்டின் 50வது தலைமை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்
- 49 வது தலைமை செயலாளர் : சிவ்தாஸ்மீனா

**ராணுவ மருத்துவ சேவைகள் பிரிவின் முதல் பெண் தலைமை இயக்குனராக சாதனா சக்சேனா பதவியேற்பு**

- ராணுவ மருத்துவ சேவைகள் பிரிவின் முதல் பெண் தலைமை இயக்குனராக லெப்டினன்ட் ஜெனரல் சாதனா சக்சேனா நாயர் பதவியேற்றார்

**எல்லை பாதுகாப்பு படையின் புதிய தலைமை இயக்குனராக தல்ஜித் சிங் சௌதரி நியமனம்**

- முன்னாள் எல்லை பாதுகாப்பு படையின் டி. ஜி நிதின் அகர்வால் தனது பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**மத்திய எல்லை பாதுகாப்பு படை**

- December 1, 1965 உருவாக்கப்பட்டது .
- உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய ஆயுதமேந்திய காவல்துறை ஆகும் .
- பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷுடனான இந்தியாவின் எல்லைகளை பாதுகாக்கும் பொறுப்பு இது

**மத்திய அமைச்சரவை செயலராக** T.V. சோமநாதன்

1. மத்திய அரசானது, நிதித் துறை செயலாளர் T.V.சோமநாதனை புதிய அமைச்சரவைச் செயலாளராக இரண்டு ஆண்டு காலத்திற்கு நியமித்துள்ளது.
2. தற்போது, இந்தியாவின் அதிக காலம் பதவி வகித்த அமைச்சரவை செயலாளர் என்ற பெருமையினைத் தக்க வைத்திருக்கும் இராஜீவ் கௌபாவினை அடுத்து அவர் பதவி ஏற்க உள்ளார்.
3. இதுவரையில், 1972 ஆம் ஆண்டு நவம்பர் 02 முதல் 1977 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை B.D. பாண்டே அதிக காலம் அமைச்சரவை பதவியினை வகித்தவர் ஆவார்.
4. அமைச்சரவை செயலாளராக பதவியேற்கும் இரண்டாவது நிதித் துறை செயலாளர் சோமநாதன் ஆவார்.
5. இந்தப் பதவிக்கு உயர்த்தப்பட்ட (1985 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில்) முதல் நிதித் துறை செயலாளர் P.K. கௌல் ஆவார்.

**CISF (Central Industrial Security Force)**

- மத்திய தொழில் பாதுகாப்பு படையின் தலைமை இயக்குனராக - ராஜ்விந்தர் சிங் பட்டீல் நியமனம்

**CISF பற்றி**

- 1983 ஜூன் 15ல் துவக்கப்பட்டது
- தலைமையிடம் டெல்லி
- இந்திய அரசின் மத்திய காவல் ஆயுதப் படைகளில் ஒன்றாகும்.
- இது இந்தியாவின் முக்கிய தொழில் நிலையங்களை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட துணை இராணுவப்படையாகும்.

**புதிய ஆளுநர்கள் நியமனம் 2024**

குடியரசுத் தலைவர் ஒன்பது மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார்

- ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி K.கைலாசநாதன் புதுச்சேரியின் **33வது** துணை நிலை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக சந்தோஷ் கங்வார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- சத்தீஸ்கர் மாநில ஆளுநராக அசாம் மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் மக்களவை உறுப்பினரான இராமன் டேகா நியமிக்கப்பட்டுள்ளார்.
- தெலுங்கானா மாநிலத்தின் கூடுதல் பொறுப்புடன் சேர்த்து ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக உள்ள C.P.இராதாகிருஷ்ணன் இனி மகாராஷ்டிரா மாநில ஆளுநராக பணி ஆற்றுவார்.
- அசாம் மாநில ஆளுநரான குலாப் சந்த் கட்டாரியா, பஞ்சாப் மாநில ஆளுநராகவும், சண்டிகர் ஒன்றியப் பிரதேசத்தின் நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மகாராஷ்டிர மாநில முன்னாள் சட்டமன்ற சபாநாயகர் ஹரிபாவ் கிசன்ராவ் பாக்டே ராஜஸ்தானின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- திரிபுரா மாநிலத்தின் முன்னாள் துணை முதல்வர் ஜிஷ்ணு தேவ் வர்மா தெலுங்கானா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரான O.P.மாத்தூர் சிக்கிம் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கர்நாடகா மாநிலத்தினைச் சேர்ந்த முன்னாள் மக்களவை உறுப்பினர் C.H.விஜய் சங்கர் மேகாலயா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**அமெரிக்காவுக்கான இந்திய தூதராக வினய் குவாத்ரா பொறுப்பேற்பு**

- இவருக்கு முன் இந்தப் பதவியில் இருந்த தரன்ஜித் சிங் சாந்து இருந்தார்

**அரசு பணியாளர் தேர்வாணையம்**

- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் புதிய தலைவராக **எஸ் கே பிரபாகர்** பொறுப்பேற்றார்
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் தலைவராக(UPSC) **பிரீத்தி சுதன்** நியமிக்கப்பட்டுள்ளார்
  1. இவருக்கு முன் இந்த பதவியில் - மனோஜ் சோனி இருந்தார்
  2. விதி 316- பொதுப்பணியாளர் தேர்வாணயத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர்

**மதிய உள்துறை செயலராக கோவிந்த் மோகன் பொறுப்பேற்பு**

- இதற்கு முன் இந்த பதவியில் அஜய்குமார் பல்லா இருந்தார்

**ICC தலைவராக ஜெய்ஷா தேர்வு**

- ஐ சி சி வரலாற்றிலேயே அதன் இளம் தலைவராக பொறுப்பேற்றார் ஜெய்ஷா (35 வயது)
- இவர் ஏற்கனவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (BCCI) செயலராக உள்ளார்
- ஐ சி சி தலைவர் பொறுப்பிற்கு வரும் ஐந்தாவது இந்தியர் ஆவார்
  1. ஜக்மோகன் டால்மியா
  2. சரத் பவார்
  3. என் ஸ்ரீனிவாசன்
  4. சஷாங்க் மனோகர்

**ICC பற்றி (Indian cricket council)**

- இது 1909 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா பிரதிநிதிகளால் இம்பீரியல் கிரிக்கெட் மாநாட்டாக நிறுவப்பட்டது.
- 1965 இல், அமைப்பு சர்வதேச கிரிக்கெட் மாநாடு என மறுபெயரிடப்பட்டது மற்றும் 1987 இல் அதன் தற்போதைய பெயரை ஏற்றுக்கொண்டது.
- ஐசிசி அதன் தலைமையகம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துபாயில் உள்ளது.

**ஆர்த்தி சரின் குழு**

- நாடு முழுவதும் மருத்துவர்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விதிமுறைகளை வகுக்க பத்து பேர் கொண்ட குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது
- மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதுநிலைப் பெண் பயிற்சி மருத்துவர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக இந்த குழு அமைக்கப்பட்டது
- இந்தக் குழுவில் மொத்தம் 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் (1 தலைவர் + 9 உறுப்பினர்கள்)

**I.G. பவானிஸ்வரி குழு**

- பள்ளி மாணவிகள் பாலியல் துன்புறுத்தல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை விரைவுப்படுத்த சிறப்பு புலனாய்வு குழுவை தமிழக அரசு அமைத்தது
- கிருஷ்ணகிரி மாவட்ட பள்ளியை போன்று மேலும் சில பள்ளிகள் கல்லூரிகளில் போலி பயிற்றுநர்களை கொண்டு பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளன அங்கும் பாலியல் அத்துமீறல்கள் நடந்துள்ளனவா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது

**கே.ஜி பாலகிருஷ்ணன் குழு**

- உருவாக்கம் - 2022
- நோக்கம்- அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் சாதிகள் ஆணை, 1950 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதங்களைத் தவிர வேறு எந்த மதத்திற்கும் மாறிய தலித்துகளுக்கு பட்டியலினத்தவர் அங்கீகாரம் (SC) வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்தல்

## 6. சர்வதேச ஒப்பந்தங்கள்

**அமெரிக்காவுடன் இந்தியா இரு பாதுகாப்பு ஒப்பந்தங்கள்**

- பாதுகாப்பு தளவாட ஒப்பந்தம் (SOSA) மற்றும் இரு நாடு இடையிலான ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கான பணி நியமனம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை கையொப்பமிடப்பட்டன
- அமெரிக்காவுடன் பாதுகாப்புத் தளவாட ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட 18-வது நாடாக இந்தியா திகழ்கிறது
- ஏற்கனவே ஆஸ்திரேலியா ஜப்பான் கனடா இஸ்ரேல் பிரிட்டன் சிங்கப்பூர் இத்தாலி உட்பட 17 நாடுகளுடன் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது

**கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு புதிய எரிபொருள் இந்தியா ரஷ்யா இடையே ஒப்பந்தம்**

- தமிழகத்தின் கூடங்குளத்தில் ரஷ்யாவின் உதவியுடன் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது
- ரஷ்யாவின் உதவியுடன் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மிதக்கும் அணுமின் நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது
- தற்போது ரஷ்யா மற்றும் சீனாவில் மட்டுமே மிதக்கும் அணுமின் நிலையமும் திட்டம் அமலில் உள்ளது

- அமெரிக்கா தென்கொரியா அர்ஜென்டினா ஆகிய நாடுகளில் இந்த திட்டத்திற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன

**இஸ்ரோ மற்றும் நாசா ஒப்பந்தம்**

- பொக்ரான் அணுகுண்டு சோதனையை அடுத்து இந்தியா மீது தடை விதிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பிறகு விண்வெளி திட்டத்தில் இஸ்ரோ உடன் இணைந்து செயல்பட நாசா தயாராகி உள்ளது
- சர்வதேச விண்வெளி மையத்திற்கு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் -9 ராக்கெட் மூலம் டிராகன் விண்கலத்தை அடுத்த ஆண்டு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது
- இந்தத் திட்டத்தை அமெரிக்காவில் உள்ள தனியார் விண்வெளி நிறுவனமான ஆக்ஸிஓம் நிறுவனம் மேற்கொள்கிறது
- அங்கேரி மற்றும் இந்தியாவை சேர்ந்த 4 வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்திற்கு செல்ல உள்ளனர்
- சர்வதேச விண்வெளி மையத்திற்கு இந்தியா சார்பில் செல்ல உள்ளவர் - சுபான்சு சுக்லா, (இவர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டால் இவருக்கு மாறாக பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர் அனுப்பப்படுவார்)

## 7. சர்வதேச நிகழ்வுகள்

**ஆப்பிரிக்காவின் உயரமான சிகரத்தில் தேசியக்கொடி**

- இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் ஆப்பிரிக்காவின் கிளிமஞ்சாரோ மலை சிகரத்தில் 7800 சதுர அடி கொண்ட இந்திய தேசியக்கொடி படர விடப்பட்டது

**உலகின் இரண்டாவது பெரிய வைரம் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது**

- தென் மத்திய ஆப்பிரிக்க நாடான பாட்ஸ்வானா நாட்டில் உலகில் இரண்டாவது பெரிய வைரம் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது
- 1905 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் வெட்டி எடுக்கப்பட்ட 3106 கேரட் வைரம் தான் உலகில் மிகப்பெரிய வைரமாகும்

**சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு இந்திய பெண்கள் பிரிட்டன் தூதராக ஒரு நாள் பணியாற்றுவதற்கு அந்நாடு அழைப்பு விடுத்துள்ளது**

- சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை (அக்டோபர் 11) முன்னிட்டு பிரிட்டன் தூதராக ஒரு நாள் பணியாற்றுவதற்கு 18 முதல் 23 வயது வரை உள்ள இந்திய பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது
- இதற்காக ஒரு நாள் தூதர் என்று பயிரிடப்பட்டு நடத்தப்படும் போட்டியில் தங்கள் பலம் மற்றும் தலைமைத்துவ திறனை உலகளாவிய தளத்தில் வெளிக்காட்ட இளம் பெண்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

**வங்காள தேசத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது**

- வங்காள தேசத்தில் இட ஒதுக்கீட்டு பிரச்சனையில் வங்காள தேசத்தின் பிரதமர் ஷேக் அசீனா இந்தியாவில் தஞ்சம் அடைந்தார்
- வங்காள தேசத்தின் அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசில் நோபல் பரிசு பெற்ற "முகமது யூனுஸ்" பொறுப்பேற்பு
- பரம ஏழைகளுக்கான வங்கியாளர் என்று அழைக்கப்படும் முகமது யூனுஸ் 2006 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார்

- 1971 ஆம் ஆண்டில் இந்தியாவின் உதவியுடன் போரிட்டு வங்காளதேசத்திற்கு பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் வாங்கி தந்த அவர்களின் வாரிசுகளுக்கு அரசு பணிகளில் 30 சதவீதம் இட ஒதுக்கீட்டு அளிக்கப்பட்டதால் கழகம் ஏற்பட்டது

**மாலத்தீவு நாட்டில் UPI சேவையை இந்தியா அறிமுகம் செய்தது**

- இந்தியா மற்றும் மாலத்தீவு இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது
- இதுவரை ஐக்கிய அரபு அமீரகம் சிங்கப்பூர் மலேசியா நேபாளம் பூடான் உள்ளிட்ட நாடுகளில் யூபிஐ மூலம் பரிவர்த்தனை செய்வதற்கான கட்டமைப்பை மத்திய அரசு உருவாக்கியுள்ளது

**யுபிஐ - UPI (Unified Payments Interface (UPI))**

- உருவாக்கப்பட்ட ஆண்டு 2016

## விளையாட்டு

**உலக அளவில் மிகவும் கடினமான விளையாட்டுப் போட்டியாக கருதப்படும் சர்வதேச "அயர்ன்மேன் டிரையத்லான்" சவாலை எல்லை பாதுகாப்பு படை (BSF) வீரர் ஹரிஷ் கல்ஜா வெற்றிகரமாக நிறைவு செய்தார்**

- இதன் மூலம் இந்த சாதனையை படைத்த முதல் மத்திய ஆயுத காவல் படை வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்

**U 17 உலக மல்யுத்த சாம்பியன் போட்டி**

- நடைபெற்ற இடம் ஜோர்டான் நாடு

**Olympic பாரிஸ் ஒலிம்பிக் 2024**

- 33 வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்றது **(ஜூலை 26-ந்தேதி முதல் ஆகஸ்டு 11, 2024-ந்தேதி வரை)**

| | | |
|---|---|---|
| ஸ்வப்னில் குசேல் (ஒரு ஒலிம்பிக் போட்டியில் ஒரே விளையாட்டில் இந்தியா முதல் முறையாக மூன்று பதக்கங்கள் வென்று சாதனை படைத்துள்ளது) | துப்பாக்கி சுடுதல் | வெண்கல பதக்கம் |
| மனு பாக்கர் | துப்பாக்கி சுடுதல் | வெண்கல பதக்கம் (2) |
| ஆடவர் ஹாக்கி அணி | | வெண்கல பதக்கம் (52 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய அணி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றுள்ளது) |
| நீரஜ் சோப்ரா | ஈட்டி எறிதல் (89.45) | வெள்ளிப் பதக்கம் (92.97 மீட்டர் ஈட்டி எய்து பாகிஸ்தான் வீரர் ஹர்ஷத் நதீம் தங்கப் பதக்கம் வென்றார்) |
| மனு பாக்கர் மற்றும் சரஜோத் சிங் | துப்பாக்கி சுடுதல் | வெண்கல பதக்கம் |
| அமன் ஷெராவத் | மல்யுத்தம் | வெண்கலம் |

- இந்தியா ஒரு வெள்ளி ஐந்து வெண்கலம் என ஆறு பதக்கங்களுடன் ஒலிம்பிக் வரலாற்றில் தனது இரண்டாவது அதிகபட்ச பதக்க எண்ணிக்கையை மீண்டும் எட்டியுள்ளது
- 33 வது பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பதக்க பட்டியலில் முதலிடத்தில் உள்ள நாடு அமெரிக்கா
- இந்தியா 71 வது இடம்
- ஒலிம்பிக் போட்டி நிறைவு நிகழ்ச்சியில் இந்திய தேசியக் கொடியை ஏந்தி வந்தவர் மனு பாக்கர்

**பாரா ஒலிம்பிக் போட்டி**

- 17ஆவது பாரா ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்றது
- ஒலிம்பிக் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது
- இந்தியாவில் இருந்து 84 வீரர்கள் சென்றனர்
- பாரிஸ் பாரா ஒலிம்பிக் போட்டியில் தொடக்க நிகழ்ச்சி அணி வகுப்பின் போது ஈட்டி எறிதல் வீரர் சுமித் அண்டில், மற்றும் குண்டு எறிதல் வீராங்கனை பாக்கிய ஸ்ரீஜாதவ் ஆகியோர் அணியை வழிநடத்தி சென்றனர்

| | | |
|---|---|---|
| அவனி லெகரா (பாரா ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கத்தை தக்க வைத்து அடுத்தடுத்து இருமுறை சாம்பியனான முதல் இந்தியர் என்ற சாதனையை இவர் படைத்துள்ளார்) | துப்பாக்கிச் சுடுதல் | தங்கப்பதக்கம் |
| மோனா அகர்வால் | துப்பாக்கிச் சுடுதல் | வெண்கலம் |
| மனீஷ் நர்வல் | துப்பாக்கிச் சுடுதல் | வெள்ளிப் பதக்கம் |
| பிரீத்தி பால் | தடகளம் | வெண்கல பதக்கம் |

**ஆசிய பேட்மிட்டன் போட்டி**

- நடைபெற்ற இடம் சீனா
- இந்தப் போட்டியில் யு 15 சிறுமியர் பிரிவில் இந்திய இளம் வீராங்கனை தன்வி பத்ரி சாம்பியன் ஆனார்

**ஷிகர் தவன் ஓய்வு பெற்றார்**

- இவர் இந்திய கிரிக்கெட் வீரர்

**ஃபிடே சர்வதேச உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டி** 2025

- ஜார்ஜ் யாவில் நடைபெற உள்ளது

**யு 17 உலக மல்யுத்த போட்டி**

- நடைபெற்ற இடம் ஜோர்டான்
- இதில் இந்தியாவின் ரோனட் தாஹியா வெண்கல பதக்கம் வென்றார்

**vi வினேஷ் போகாட் ஓய்வு பெற்றார்**

- மல்யுத்த வீராங்கனை
- ஹரியானா மாநிலத்தை சேர்ந்தவர்
- பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் தகுதி நீக்கம் செய்யப்பட்டார் 2024

**டைமண்ட் லீக்**

- நடைபெற்ற இடம் ஸ்விட்சர்லாந்து

  1. முதலிடம் - ஆண்டர்சன் பீட்டர்ஸ் 2. இரண்டாம் இடம் நீரஜ் சோப்ரா

## 9. முக்கிய ஆளுமைகள்

**இந்தியாவின் சிறந்த முதல்வர்கள் பட்டியல்**

- முதலிடம் - யோகி ஆதித்யநாத்
- இரண்டாம் இடம் - அரவிந்த் கெஜ்ரிவால்
- மூன்றாம் இடம் - மம்தா பானர்ஜி
- நான்காம் இடம் - மு க ஸ்டாலின்

**செல்வாக்கு மிக்க முதல்வர் பட்டியல்**

- அசாம் முதல்வர்- ஹிமந்த பிஸ்வா சர்மா

## 10. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

**SSLV D-3 ராக்கெட்**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெள்ளிக்கிழமை ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து சிறிய செயற்கைக்கோள் ஏவுகணை வாகனத்தில் (SSLV-D3) புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை (EOS-08) வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- ஏவப்பட்ட நாள்: 16 ஆகஸ்ட் 2024
- வடிவமைப்பு: இஸ்ரோ
- மொத்த எடை 176 கிலோ எடை கொண்டது
- தரையில் இருந்து 475 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புவி தாழ்வட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது
- இந்த ராக்கெட்டில் மூன்று ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன
    1. இன்ப்ராரெட் பேலோடு (EOIR) - பேருடன் மேலாண்மை சுற்றுச்சூழல் கண்காணிப்பு இரவில் துல்லியமான படம் எடுக்க உதவி செய்யும்
    2. Global navigation satellite system - replectometri payload (GNSS-R) - கடல் மேற்பரப்பு காற்றின் செயல்பாடு மண்ணின் ஈரப்பதம் மதிப்பீடு நீர் நிலைகளை கண்டறிதல் போன்ற பணிகளும் பயன்படும்
    3. சிக் யுவி டோசிமீட்டர் - (SIC UV Dosimeter) - யுவி கதிர்வீச்சு அளவை கண்காணித்து எச்சரிக்கை அளிக்கும் இது மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்ட விண்கலத்திலும் இடம்பெற உள்ளது
- **நானோ செயற்கைக்கோள்**
    - ★ எதிர்கால தொழில்நுட்ப தேவைக்கான ஆய்வுகளை இந்த கருவி மேற்கொள்ளும்
    - ★ இந்த ராக்கெட்டில் ஃபேஸ் கிட்ஸ் ஆப் இந்தியா ஸ்டார் அப் நிறுவனம் வடிவமைத்துள்ள 200 கிராம் இடை கொண்ட SR- SEMOSAT எனும் செயற்கைக்கோள்களும் செலுத்தப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

**எஸ்.எஸ்.எல்.வி ரக ராக்கெட்கள்**

1. இவை 500 கிலோ வரை எடை கொண்ட செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தும் திறன் கொண்டது.

2. குறைந்த செலவில் பூமியின் தாழ்வட்டப் பாதையில் செயற்கைக்கோள்களை நிலைநிறுத்தும் வகையில் எஸ்.எஸ்.எல்.வி ராக்கெட்களை பயன்படுத்தி கொள்ளலாம் என்று இஸ்ரோ தெரிவித்தது. இது 34 மீட்டர் நீளம், 2 மீட்டர் விட்டம், 120 டன் எடை கொண்டது.

**இந்தியாவின் முதல் மறுபயன்பாட்டு ஹைபிரிட் ராக்கெட் - ரூமி 1**

- சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் பட்டிப்புலம் என்ற இடத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.
- செயற்கைக்கோள்களை புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்திவிட்டு ராக்கெட் மீண்டும் பூமிக்கு திரும்பியது.
- தமிழகத்தை சேர்ந்த ஸ்டார்ட் அப் நிறுவனமான ஸ்பேஸ் ஸ்டோன் இந்தியா நிறுவனமும், மார்ட்டின் குழுமமும் இணைந்து மிஷின் ரூமி 2024 என்ற பெயரில் மீண்டும் பயன்படுத்தக்கூடிய ராக்கெட்டை உருவாக்கியுள்ளன.
- இதுவே இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் Reuse Hybrid Rocket ஆகும்.
- தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் இந்தியாவின் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்கப்பட உள்ளது.

**ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயணம்**

1. சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப் பட உள்ள ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயணத்திற்காக இந்தியா இரண்டு விண்வெளி வீரர்களைத் தேர்வு செய்துள்ளது.
2. ககன்யான் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள நான்கு விண்வெளி வீரர்களில் குரூப் கேப்டன் **'சுபான்ஷு சுக்லா'** சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்ல இருப்பதாக இஸ்ரோ அறிவிப்பு.
3. இவருக்கு மாற்று வீரராக குரூப் **கேப்டன் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர்** தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.
4. ஆக்ஸியம்-4 விண்வெளிப் பயணத் திட்டமானது, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்படும் நான்காவது தனியார் விண்வெளிப் பயணமாகும்.
5. இரு இந்தியர்களில் சுபான்ஷு சுக்லா ஆக்ஸ்யம்- 4 மூலம் இறுதி செய்யப் பட்டுள்ளார்.
6. மற்ற 3 உறுப்பினர்கள்:
   1. நாசா விண்வெளி வீரர் பெக்கி விட்சன்
   2. போலந்து நாட்டின் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி (ESA), மற்றும்
   3. ஹங்கேரியின் திபோர் கபு.

**அஸ்த்ரா ஏவுகணை**

- தயாரிப்பு - பாரத் டைனமிக் நிறுவனம் மற்றும் DRDO.
- இந்த ஏவுகணை சுகோய் மற்றும் தேஜஸ் விமானங்களில் பயன்படுத்த முடியும் .
- அஸ்திரா ஏவுகணை மூலம் 300 கிலோ மீட்டர் தூரம் உள்ள வான் இலக்குகளை போர் விமானத்தில் இருந்து தாக்க முடியும்.

**இஸ்ரோவின் சாதனைகள்**

1. 9 ஏப்ரல் 1975 - இந்தியா தயாரித்த ஆரியபட்டா எனும் செயற்கைக்கோளை சோவியத் யூனியன் உதவியோடு விண்ணில் ஏவியது.
2. 22 அக்டோபர் 2008 - சந்திராயன் 1 விண்ணில் ஏவப்பட்டது
3. 5 நவம்பர் 2013 - மங்கல்யான்(செவ்வாய் கோள்) திட்டம் செயல்படுத்தப்பட்டது

4. 26 செப்டம்பர் 2015 - அஸ்ரோசாட் எனும் விண்வெளி தொலைநோக்கி ஏவப்பட்டது
5. 22 ஜூலை 2019 - சந்திராயன் 2 நிலவை ஆராய கேவப்பட்டது
6. 14 ஜூலை 2023 - சந்திராயன் 3 நிலவில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது
7. 2 செப்டம்பர் 2023 - ஆதித்யா L1 திட்டம் செயல்படுத்தப்பட்டது

**இஸ்ரோ தமிழர்கள்**

| | |
|---|---|
| அப்துல் கலாம் | இந்தியாவின் ஏவுகணை நாயகன் |
| வளர்மதி | 1. தமிழ்நாட்டின் அரியலூரில் பிறந்தவர்<br>2. 2011ன் ஜீசாட் 12 பணியின் திட்ட இயக்குனர்<br>3. 2015ல் அப்துல் கலாம் விருதை வென்ற முதல் நபர் |
| கே. சிவன் | 1. கன்னியாகுமரி மாவட்டம்<br>2. இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர் |
| நிகர் ஷாஜி | 1. தென்காசி மாவட்டம்<br>2. ஆதித்யா L1 திட்ட இயக்குனர் |
| மயில்சாமி அண்ணாதுரை | 1. கோயம்புத்தூர் மாவட்டம்<br>2. சந்திராயன் 1 திட்ட இயக்குனர் |
| அருணன் சுப்பையா | 1. திருநெல்வேலி மாவட்டம்<br>2. மங்கள்யான் திட்டத்தின் திட்ட இயக்குனர் |
| வனிதா முத்தையா | 1. சென்னை<br>2. இஸ்ரோவில் கோள்களுக்கு இடையிலான ஆராய்ச்சியில் திட்ட இயக்குனராக பொறுப்பேற்ற முதல் பெண்<br>3. சந்திராயன் 2 திட்ட இயக்குனர் |
| ப. வீர முத்துவேல் | 1. விழுப்புரம் மாவட்டம்<br>2. சந்திராயன் 3 திட்ட இயக்குனர் |

**இஸ்ரோவின் எதிர்கால திட்டங்கள்**

| | |
|---|---|
| 2025 | வெள்ளி கோல் ஆய்வுக்காக சுக்கிரயான் |
| 2026 | செவ்வாய் ஆய்வுக்கு மங்கள்யான் 2 |
| 2026 | இந்தியர்களை விண்வெளிக்கு ஏந்தி செல்லும் ககன்யான் திட்டம் |
| 2028 | சந்திராயன் 4 நிலவுக்கு சென்று அங்கிருந்து கல் மண் மாதிரிகளை திரட்டி திரும்ப பூமிக்கு எடுத்து வரும் திட்டம் |
| 2028 - 2035 | 15 முதல் 20 நாட்கள் வரை தொடர்ந்து விண்வெளியில் தங்கி ஆய்வு செய்ய இந்திய விண்வெளி குடில் திட்டம் |

## 11. இலக்குகள் மற்றும் குறியீடுகள்

**மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்ட குறியீடுகள்**

வெளியீடு - மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான்

- ஒட்டுமொத்த கல்வி நிறுவனங்களில் தேசிய அளவில் முதலிடம் வகிப்பது சென்னை ஐஐடி ( இது பொறியியல் பிரிவில் முதலிடத்தையும் ஆராய்ச்சி மற்றும் புதுமைகள் பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது)
- 2nd - Bangalore IISC
- 3rd - Mumbai IIT

**மாநில பல்கலைக்கழகங்களுக்கான பிரிவு**

- முதலிடம் - சென்னை அண்ணா பல்கலைக்கழகம்

**மத்திய புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்ட "இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்கள் 2023" என்ற பெயரில் வெளியிடப்பட்ட அறிக்கை**

- 2036 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 152. 2 கோடியாக அதிகரிக்கும்
- 2011 இல் ஆயிரம் ஆண்களுக்கு 943 ஆக இருந்த பெண்களின் எண்ணிக்கை 2036-ல் 952 ஆக அதிகரிக்கும்
- 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 15 வயதிற்குட்பட்ட அவர்களின் விகிதம் 2036-ல் குறையும்
- இதற்கு மாறாக 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் விகிதம் படிப்படியாக அதிகரிக்கும்

## 12. விருதுகள்

**இந்தியாவில் அதிகமாக சுதந்திர தின உரையை ஆற்றிய பிரதமர்கள்**

- ஜவஹர்லால் நேரு 17 முறை
- இந்திரா காந்தி 16 முறை (தொடர்ச்சியாக 11 முறை)
- நரேந்திர மோடி - 10 முறை
- மன்மோகன் சிங் பத்து முறை (தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி கடந்த பத்து ஆண்டுகளாக சுதந்திர தின உரையாற்றி மன்மோகன் சிங்கின் சாதனையை சமன் செய்துள்ளார்
- இந்தியாவில் குடியரசு தினத்தன்று குடியரசுத் தலைவர் கோட்டையில் கொடியேற்றுவார் (சுதந்திர தினத்தன்று பிரதமர் கொடியேற்றுவார்)
- இதேபோன்று மாநிலங்களிலும் குடியரசு தினத்தன்று ஆளுநர் கொடியேற்றுவார்
- நாடு 1947-இல் சுதந்திரம் பெற்ற போதிலும் குடியரசு தினம் சுதந்திர தினம் ஆகிய நாட்களில் மாநில ஆளுநர்களை தேசிய கொடியை ஏற்றுவது வழக்கமாக இருந்தது
- 1969 இல் தமிழக முதல்வராக பதவி ஏற்ற மு. கருணாநிதி மாநிலத்தில் சுய ஆட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார்.
- இதன் தொடர்ச்சியாக சுதந்திர தினத்தில் தேசிய கொடியை ஏற்ற வைக்கும் உரிமையை மாநில முதல்வர்களுக்கு வழங்குமாறு பிரதமர் இந்திரா காந்திக்கு கடிதம் எழுதினார் அவரது கோரிக்கையை இந்திரா காந்தி ஏற்றுக் கொண்டார்
- சுதந்திர தினத்தில் மாநில முதல்வர்களும் குடியரசு தினத்தில் ஆளுநர்களும் கொடியேற்றும் சட்டம் கொண்டுவரப்பட்டது
- 1974 : Dr. கருணாநிதி, சுதந்திர தினத்தில் தமிழக முதல்வராக தேசிய கொடியை ஏற்றினார்.

**சுதந்திர தின விருதுகள்**

- தகைசால் தமிழர் விருது - குமரி ஆனந்தன் (தகைசால் தமிழர் விருது முதன்முதலாக பெற்றவர் : சங்கரையா)
- A.P.J அப்துல் கலாம் விருது - ப. வீர முத்துவேல் (சந்திராயன் -3 திட்ட இயக்குனர்)
- துணிவு சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது - ஆ. சபீனா (வயநாடு நிலச்சரிவின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணிச்சலாக சென்று மருத்துவ உதவி அளித்த நீலகிரியை சேர்ந்த செவிலியர்)
- நல் ஆளுமை விருது - டி. வனிதா (மகளிர் உரிமைத் தொகை பயனாளிகள் தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்காக முதல்வரின் முகவரித் துறை தலைமை தொழில்நுட்ப அதிகாரிக்கு வழங்கப்பட்டது) - (மேலும் இந்த விருதானது J.இன்னசென்ட் திவ்யா, S.திவ்யதர்ஷினி, V.P.ஜெயசீலன், K.இளம்பஹவத், N.கோபால கிருஷ்ணன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது)
- மகளிர் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய சமூக சேவகர் : சென்னையை சேர்ந்த மீனா சுப்பிரமணியனுக்கும்
- சிறந்த தொண்டு நிறுவனமாக : மதுரை ஐஸ்வரியம் அறக்கட்டளைக்கும் விருது வழங்கப்பட்டது
- மூன்று அதிகாரிகள் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் D.ஜகந்நாதன் மற்றும் P.மதுசூதன் மற்றும் ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி R.சுதன் ரெட்டி ஆகியோர் இந்த ஆண்டிற்கான புதுமையான முயற்சிகளுக்கான சான்றிதழ்களைப் பெற உள்ளனர்.
- மாற்றுத்திறனாளிகள் சேவை விருது
    1. மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரிந்த மருத்துவர் : ஜா விஜயலட்சுமி
    2. சிறந்த நிறுவனமான சென்னையைச் சேர்ந்த வித்தியாசாகர் நிறுவனம்
- சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான விருது
    1. சிறந்த மாநகராட்சி: கோயம்புத்தூர்
    2. சிறந்த நகராட்சி: திருவாரூர்
    3. சிறந்த பேரூராட்சி : கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர்

**70 வது தேசிய திரைப்பட விருதுகள்** (2022)

- அமைச்சகம்: மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை
- சிறந்த நடிகர் - ரிஷபம் ஷெட்டி (காந்தாரா)
- சிறந்த படம் - ஆட்டம் (மலையாளம்)
- சிறந்த பொழுதுபோக்கு படம்: காந்தாரா
- சிறந்த நடிகை : நித்யா மேனன் (திருச்சிற்றம்பலம்) மற்றும் மானசி பரேக்
- மணிரத்தினம் இயக்கிய பொன்னியின் செல்வன் படம் நான்கு விருதுகளை பெற்றுள்ளது
    1. சிறந்த தமிழ் திரைப்படம்
    2. படத்தின் பின்னணி இசை - ஏ.ஆர். ரஹ்மான்
    3. ஒளிப்பதிவு : ரவிவர்மன்
    4. ஒலி வடிவமைப்பு : ஆனந்த் கிருஷ்ணமூர்த்தி
- சிறந்த இசையமைப்பாளர் : பிரீத்தம்

**ராஷ்ட்ரிய விஞ்ஞான புரஸ்கார் விருது**

- ஆண்டுதோறும் தேசிய விண்வெளி தினத்தில் ராஷ்ட்ரிய விஞ்ஞான புரஸ்கார் விருதுகள் வழங்கப்படும் என மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது

- அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் சாதனை படைப்பவர்களை அங்கீகரிக்கும் வகையில் விஞ்ஞான ரத்னா ஸ்ரீ விஞ்யான் யுவ சாந்தி ஸ்வரூப் பட்னாகர், மற்றும் விஞ்ஞான குழு ஆகிய நான்கு பெயர்களில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.
- இந்த விருது முதல் முறையாக வழங்கப்படுகிறது.
- **விஞ்ஞான ரத்னா விருது** - பத்மநாபன்
  - ✓ பெங்களூரு ஐஐஎஸ்சி முன்னாள் இயக்குனர்
  - ✓ விருது வழங்கியவர் குடியரசு தலைவர்
- **விஞ்ஞான் ஸ்ரீ விருது** - மொத்தம் 13 நபர்களுக்கு வழங்கப்பட்டது
  - ✓ அன்னபூரணி சுப்பிரமணியம் பெங்களூரில் உள்ள வான் இயற்பியல் மையத்தின் இயக்குனர்
  - ✓ ஆனந்த ராமகிருஷ்ணன் திருவனந்தபுரத்தில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் இயக்குனர்
  - ✓ அவேஷ் குமார் - பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையத்தின் ரசாயன பிரிவு இயக்குனர்
  - ✓ வாஜி அகமது நக்வி - CSIR - தேசிய தாவரவியல் ஆய்வு மையத் சேர்ந்த பேராசிரியர்
- **விஞ்ஞான யுவ சாந்தி விஸ்வரூப் பட்னாகனர்** - மொத்தம் 18 பேருக்கு வழங்கப்பட்டது
  - ✓ ராக்ஸி மேத்தியூ - புனே வானியல் மைய விஞ்ஞானி
  - ✓ ராதாகிருஷ்ணன் சென்னை ஐஐடி பேராசிரியர்
  - ✓ பிரபு ராஜகோபால் சென்னை ஐஐடி பேராசிரியர்
  - ✓ பிரக்யாதுருவ் யாதவ் - கரோனா தடுப்பூசி தயாரிப்பில் முக்கிய பங்காற்றிய புனே ஐசிஎமார் தேசிய வைரலாஜி மையத்தின் விஞ்ஞானி
- **விஞ்ஞான்குழு விருது** - சந்திராயன் 3 திட்டத்தின் திட்டு இயக்குனர் வீரமுத்துவேல் அவர்களுக்கு வழங்கப்பட்டது

**இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்மு டிமோர் - லெஸ்டே நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டது**

- "கிராண்ட் காலர் ஆப் டிமோர் -லெஸ்டே என்ற விருது வழங்கப்பட்டது
- டிமோர் - டெஸ்டே அதிபர் - ராமோஸ் - லெஸ்டே
- தென்கிழக்கு ஆசிய நாடான டியோர் - லெஸ்டே நாட்டிற்கு பயணம் செய்த முதல் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஆவார்

**"கம்பானியன் ஆஃப் பீஜி" விருது குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டது**

- ஃபீஜி நாட்டின் உயரிய விருது இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு வழங்கப்பட்டது
- பீஜி நாட்டின் அதிபர் - கேடோனிவிர்
- 145 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து முதல் முறையாக ஃபிஜி நாட்டிற்கு ஒப்பந்த கூலிகள் அழைத்து வரப்பட்டதன் மூலம் இந்தியாவையும் ஃபிஜியையும் விதி ஒன்று சேர்த்தது.

## 13. மாநாடுகள்

**குடியரசு தலைவர் திரௌபதி மும்மு தலைமையில் ஆளுநர்கள் மாநாடு தில்லியில் நடைபெற்றது**

- மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை திறம்பட அமல்படுத்துதல் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் மற்றும் உயர்கல்வியில் சீர்திருத்தங்கள் பழங்குடியினர் பகுதிகளில் வளர்ச்சி உள்ளிட்டவை குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட்டது

**சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் மாநாடு**

- நடைபெற்ற இடம் புதுடெல்லி
- இந்த மாநாடு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது
- இந்த மாநாட்டின் 32 வது மாநாடு 65 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவில் நடைபெறுகிறது

**இந்திய தொழில் கூட்டமைப்பின் (CII) பதினைந்தாவது பதிப்பு "புட்ப்ரோ 2024" கண்காட்சி சென்னையில் நடைபெற்றது**

## 14. இந்திய ஆட்சியியல் பற்றிய செய்திகள்

**சிக்கிம் மாநிலத்தின் அலுவல் மொழியாக நேபாளி மொழி சேர்க்கப்பட்டுள்ளது**

- வடகிழக்கு மாநிலமான சிக்கி மின் அலுவல் மொழியாக நேபாளி மொழி சேர்க்கப்பட்டுள்ளது.
- முன்னதாக ஆங்கிலம் மட்டுமே மாநிலத்தின் அலுவல் மொழியாக இருந்தது ஆனால் தற்போது நேபாளி மொழியும் இணைக்கப்பட்டுள்ளது.
- நேபாளி மூடி 1992 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக உள்ளது.
- நேபாளம், பூட்டான், இந்தியா, மியான்மரில் இந்த மொழி பேசப்படுகிறது.
- இது பெரும்பாலும் சமஸ்கிருதம் சார்ந்து இயங்கும் மொழியாகும்.
- தேவ நாகரி எழுத்து முறையைக் கொண்டது.
- மாநிலத்தின் முதல்வர் - B.S. தமாங்.
- சிக்கிம் அலுவல் மொழி சட்டம் 1977 அலுவல் மொழியாக நேபாளி மொழி அங்கீகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**இந்திய குடியுரிமை திருத்தச் சட்டம் 2019**

- குடியுரிமை திருத்த சட்டம் 2019 இன் படி பாகிஸ்தானில் இருந்து இந்தியா வந்த கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த **ஜோசப் பிரான்சிஸ் பேரோ** என்பவருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டது.
- இவர் கோவா மாநிலத்தை சேர்ந்தவர்.
- இந்திய குடியுரிமை சட்டம் தற்போது வரை ஒன்பது முறை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
- இந்திய குடியுரிமை சட்டம் டிசம்பர்31, 2014க்கு முன்பு ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் இருந்து சட்டவிரோதமாக குடியேறிய இந்து, சீக்கியர், பௌத்தர், ஜெயின், பார்சி மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு குடியுரிமை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த சட்டத்தில் முஸ்லிம்கள் மற்றும் இலங்கை தமிழர்கள் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சட்டப்பிரிவு 370**

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த அரசமைப்பு சட்டப்பிரிவு 370 மற்றும் 35 (ஏ) ஆகியவை ஆகஸ்ட் 5 2019 அன்று ரத்து செய்யப்பட்டது.
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டன.

**வக்பு வாரியம் சட்ட திருத்த மசோதா தாக்கல்**

- கடந்த 1947 ஆம் ஆண்டில் இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்தியாவில் இருந்து. பாகிஸ்தானுக்கு இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம்களின் நிலங்கள் சொத்துக்களை நிர்வகிக்க கடந்த 1954 இல் வக்பு சட்டம் இயற்றப்பட்டு 1955இல் அமலுக்கு வந்தது.

- 1995இல் அப்போதைய பிரதமர் நரசிம்ம ராவ் தலைமையிலான அரசு அந்த சட்டத்தில் திருத்தம் செய்து வக்பு வாரியங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கினார்.
- 2013 ஆம் ஆண்டு திருத்தம் செய்து வக்பு வாரிய சொத்துகளுக்கு புவியியல் தகவல் உரிமை வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.
- மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு.
- சட்டப்பிரிவு 30 - கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் நிர்வகிப்பதற்கும் சிறுபான்மையினரின் உரிமை.

**பேரிடர் மேலாண்மை (திருத்த) மசோதா, 2024 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது**

தற்போதுள்ள பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005ஐ திருத்த இந்த மசோதா முயல்கிறது .

- 15வது நிதிக் குழுவின் பரிந்துரைகளை இணைத்து , **வளர்ச்சித் திட்டங்களில் பேரிடர் மேலாண்மையை** முக்கிய நீரோட்டத்தில் கொண்டு வருவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது .

**மசோதாவில் முக்கிய மாற்றங்கள்:**

- **திட்டம் தயாரித்தல்** : பேரிடர் திட்டப் பொறுப்புகளை நிர்வாகக் குழுக்களிடமிருந்து **தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் (SDMA) ஆகியவற்றுக்கு மாற்றுகிறது.**
- **NDMA மற்றும் SDMA இன் கூடுதல் செயல்பாடுகள்** : பேரழிவு அபாயங்களை மதிப்பீடு செய்தல், தொழில்நுட்ப உதவி வழங்குதல், நிவாரண வழிகாட்டுதல்களை பரிந்துரைத்தல் போன்ற சில செயல்பாடுகளை அந்தந்த நிலைகளில் சேர்க்கிறது.
- **மாநில மற்றும் தேசிய பேரிடர் தரவுத்தளம்:** பேரிடர் அபாயங்களின் வகை மற்றும் தீவிரம், நிதி ஒதுக்கீடு போன்ற தகவல்களைக் கொண்டிருக்கும்.
- **நகர்ப்புற DM அதிகாரிகள்:** மாநில தலைநகரங்கள் மற்றும் முனிசிபல் கார்ப்பரேஷனைக் கொண்ட நகரங்களுக்கு தனி **நகர்ப்புற பேரிடர் மேலாண்மை ஆணையத்தை** அமைக்க மாநில அரசுக்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது .
- **மாநில பேரிடர் மீட்புப் படை (SDRF) உருவாக்கம்: ஒரு SDRF ஐ உருவாக்கவும் அதன் செயல்பாடுகள் மற்றும் சேவை விதிமுறைகளை வரையறுக்கவும்** மாநில அரசுக்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது .
- **தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழு (NCMC) மற்றும் உயர்நிலைக் குழு (HLC):** மசோதா NCMC மற்றும் HLC க்கு சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்குகிறது.
- **NCMC பெரிய பேரிடர்களுக்கான நோடல் அமைப்பாக** செயல்படும் அதே வேளையில், பேரிடர்களின் போது மாநில அரசுகளுக்கு HLC நிதி உதவி வழங்கும்.

**கொதிகலன் மசோதா, 2024**

- டிசம்பர் 4, 2024 அன்று மாநிலங்களவையால் நிறைவேற்றப்பட்டது
- இது 1923 ஆம் ஆண்டின் கொதிகலன் சட்டத்தை மாற்றும்.
- நீராவி கொதி கலன் வெடிப்புகளிலிருந்து மக்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- செயல்முறைகளை எளிதாக்குவதையும் தொழில்துறை வளர்ச்சியை ஆதரிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 15. பொருளாதாரம்

- இந்திய பங்கு சந்தையின் மதிப்பு 5.5 லட்சம் கோடி
- இந்தியாவின் வேலை வாய்ப்பு 64.33 கோடி

குளோபல் பைனான்ஸ் இதலின் 2024 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியாளர் அறிக்கை

- இந்த அறிக்கையில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்ததாஸ் இடம்பெற்றுள்ளார்.

## 16. நூல்கள் மற்றும் ஆசிரியர்கள்

**"கலைஞர் எனும் தாய்" நூல்**

- இந்த நூலை எழுதியவர் - எ.வ.வேலு (தமிழக நெடுஞ்சாலைகள் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்).
- வெளியீடு - தமிழக முதல்வர்.
- இந்த நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டவர்: ரஜினிகாந்த்.

**"கலைஞர் 100 கவிதைகள்" நூல் வெளியீடு**

- இந்த நூலை எழுதியவர் கவிஞர் வைரமுத்து.
- வெளியீடு மு க ஸ்டாலின்.
- முதல் பிரதியை பெற்றுக் கொண்டவர் : கி வீரமணி.

**தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டது**

- 15 வயதில் மாணவ நேசன் என்ற கையெழுத்து ஏடு தொடங்கி 18 வயதில் பேரறிஞர் அண்ணாவின் திராவிட நாடுகளில் இளமைப்பலி என்று அவரது முதற்கட்டுரை வரை வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது
- தனது 23ஆம் வயதில் ராஜகுமாரி திரைப்படத்திற்கு முதன்முதலாக வசனம் எழுதினார்.
- ஓ எம் பியூட்டி முதன் முதலில் முரசொலி எனும் துண்டு இதழ் வெளியிட்டை 1942 ஆம் ஆண்டு வெளியிட்டார். 1960 ஆம் ஆண்டு அதனை நாளிதழாக மாற்றினார்.
- ஐந்து முறை தமிழக முதல்வராக பணியாற்றியுள்ளார்

## 17. போர் பயிற்சிகள்

**"பிட்ச் பிளாக்" போர் பயிற்சி**

- ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது
- இதில் இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற 20 நாடுகள் பங்கேற்றனர்
- இந்த பயிற்சியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும்

**"தரங் சக்தி -2024" போர் பயிற்சி**

- நடைபெற்ற இடம் : கோவை மாவட்டம் சூலூர்
- பங்கேற்ற நாடுகள் இந்தியா, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன் (மொத்தம் ஐந்து நாடுகள்)
- இந்திய விமானப்படை தலைமை: தளபதி விவேக் ராம் சவுத்ரி

## 18.புகழ்பெற்ற நபர்கள்

**யாமினி கிருஷ்ணமூர்த்தி**

- புகழ் பெற்ற பரதநாட்டிய கலைஞர்
- 1968 ஆம் ஆண்டு தனது 28 வது வயதில் பத்மஸ்ரீ விருது பெற்றார்
- 2001 பத்மபூஷன்
- 2016 பத்ம விபூஷன்
- 1977 சங்கித நாடக அகாதெமி விருது
- அண்மையில் மரணம் அடைந்தார்

**புத்ததேவ் பட்டாச்சாரியா**

- மேற்கு வங்கத்தின் முன்னாள் முதல்வர்
- 1977 முதல் 2011 வரை 34 ஆண்டுகளுக்கு மாஸ்டர் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி முன்னிலை ஆட்சி செய்தது
- 2000 ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வர் ஜோதி பாசு பதவி விலகியதை எடுத்து மாநிலத்தின் ஏழாவது முதல்வராக புத்த தேவ் பட்டாச்சாரியா பதவியேற்றார்
- 2001 மற்றும் 2006 பேரவைத் தேர்தல்களில் பட்டாச்சாரியார் தலைமையில் மார்க்சிஸ்ட் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்தது
- 2022 ஆம் ஆண்டில் இவருக்கு மத்திய அரசு பத்மபூஷன் விருது அறிவித்தது ஆனால் தனக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவில்லை என்று கூறி அந்த விருதை ஏற்க மறுத்து விட்டார்

**அக்னி ஏவுகணைகளின் தந்தை**

1. இந்தியாவில் 'அக்னி ஏவுகணைகளின் தந்தை' என்று அழைக்கப்படும் இராம் நரேன் அகர்வால் சமீபத்தில் ஹைதராபாத்தில் காலமானார்.
2. அவர் அக்னி ஏவுகணை திட்ட இயக்குநராகவும், ஐதராபாத்தில் உள்ள ASL (மேம்பட்ட தொழில்நுட்ப அமைப்புகள் ஆய்வகம்) இயக்குநராகவும் பணியாற்றினார்.
3. 1983 ஆம் ஆண்டில் இந்தியாவின் அக்னி ஏவுகணைத் திட்டம் தொடங்கப்பட்டது முதல் 2005 ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெறும் வரை அந்தத் திட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார்.
4. மத்திய அரசானது அவருக்கு 1990 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ மற்றும் 2000 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருதுகளை வழங்கியது.
5. 1983 ஆம் ஆண்டில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டப்பட்ட ஏவுகணை உருவாக்கத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஐந்து ஏவுகணைகளில் அக்னி ஏவுகணை மிகவும் இலட்சிய நோக்கமிக்கது ஆகும்.
6. மற்ற 4 ஏவுகணைகள் பிருத்வி, ஆகாஷ், நாக் மற்றும் திரிசூல் ஆகியனவாகும்.

# முக்கிய தினங்கள்

| நாள் | முக்கிய தினம் | மைக்கருத்து |
|---|---|---|
| ஆகஸ்ட் 1 | உலகளாவிய இணைய தினம்(World Wide Web Day) | உலகளாவிய இணையம் தொடங்கப்பட்டதை நினைவுகூறும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்பட்டது<br>உலகளாவிய இனையத்தை டிம் பெர்ஸ் - லீ 1989 இல் கண்டுபிடித்தார் |
| ஆகஸ்ட் 3 | இந்திய உறுப்பு தான தினம் | (உலகஉறுப்பு தான தினம் ஆகஸ்ட் 13) |
| ஆகஸ்ட் 1 முதல் 7 | உலக தாய்பால் வாரம் | கருப்பொருள்: ***Closing the gap: Breastfeeding support for all*** |
| ஆகஸ்ட் 7 | தேசிய கைத்தறி தினம் | |
| ஆகஸ்ட் 7 | தேசிய ஈட்டி எறிதல் தினம | டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் நீரவ்சோப்ரா தங்கபதக்கம் வென்றதை நினைவுகூறும் வகையில் இந்த தினம் இந்திய தடகள கூட்டமைப்பு இந்த தினத்தை அறிவித்தது |
| ஆகஸ்ட் 9 | உலக பழங்குடியினர் தினம் | கருப்பொருள்: ***"Protecting the Rights of Indigenous Peoples in Voluntary Isolation and Initial Contact".*** |
| ஆகஸ்ட் 10 | உலக உயிரி எரிபொருள் தினம் | 2025 - 26 ஆம் ஆண்டுக்குள் 20 சதவீதம் எத்தனால் கலப்பு இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது |
| ஆகஸ்ட் 10 | உலக சிங்க தினம் | |
| ஆகஸ்ட் 12 | சர்வதேச இளைஞர் தினம்<br>உலக யானைகள் தினம் | |
| ஆகஸ்ட் 13 | உலக உறுப்பு தானதினம் | |
| ஆகஸ்ட் 20 | உலக கொசுக்கள் தினம் | |
| ஆகஸ்ட் 22 | மெட்ராஸ் தினம் | 22 ஆகஸ்ட் 1639 அன்று நிறுவப்பட்டது |
| ஆகஸ்ட் 23 | இந்தியாவில் தேசிய விண்வெளி தினம் | சந்திரயான்-3 நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியதை நினைவுகூரும் |
| ஆகஸ்ட் 29 | தேசி விளையாட்டு தினம் | மேஜர் தியான் சந்த் அவர்களின் பிறந்த தினம் |